**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 142/2022</u>**
**<u>நாள் 07/01/2025 செவ்வாய்க்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – தேவகி | க/பெயர் – செல்வராஜ் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – எண் 23/3, மணலி புதுநகர், சென்னை. | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

என்னுடைய கணவர் செல்வராஜ் ஸ்ரீபெருமந்தூர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்தார். எனது கணவர் என்னிடம் இருந்து விவாகரத்து கோரி பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. மனு தாக்கல் செய்த விவரம் எனது கணவர் இறந்த பிறகு ஒரு பிரச்சனை காரணமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது 2021ல் தான் தெரியவந்தது. மேற்படி விவாகரத்து மனு எனக்கு எதிராக உத்தரவு ஆன விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவாகரத்து மனுவின் மீதான உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தான் தாக்கல் செய்தேன். நான் தான் எனது கணவரின் வாரீசு என்பதற்கான ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் எனது கணவருடன் 2014 வரை ஒன்றாக வசித்தோம், அதன் பிறகு தனியாக வசித்து வந்தோம். எனது கணவரின் சகோதர சகோதரிகள் என்னை கொடுமைப்படுத்தியதால் நான் எனது கணவரிடம் இருந்து பிரிந்து வந்தேன். எனது கணவர் என்னை எந்த ஒரு கொடுமையும் செய்யவில்லை. எனது கணவரின் சகோதர சகோதரிகள் என்னை அடித்து

கொடுமை செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனது கணவர் என்னை புகார் கொடுக்க விடவில்லை அவரும் புகார் கொடுக்கவில்லை. எனது கணவர் என்னை அவரது பணி பதிவேட்டில் இருந்து நீக்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு நீங்கள் கூறி தான் தெரியும். எனது கணவர் இறப்பிற்கு பிறகு பணி கொடை மற்றும் பண பலன்கள் கேட்டு மனு கொடுத்தேன். மேற்படி பண பலன்கள் இதுவரை வரவில்லை. ஏன் என்றால் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் வரவில்லை. எனது கணவரின் பண பலன்கள் எனக்கு வராததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் எனது கணவரின் அலுவலகம் சென்று விசாரணை செய்த போது எனது கணவர் விவாகரத்து பெற்றுவிட்டதால் அவரது பண பலன்களை எனக்கு கொடுக்க இயலாது என்று கூறிவிட்டனர். எனது கணவர் என்னை விவாகரத்து செய்து நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு பெற்றுள்ளதால் அதன் அடிப்படையில் நான் சட்டப்படியான மனைவி என்ற தகுதியை இழந்துவிட்டேன் என்றும் எனவே எனது கணவரின் பண பலன்கள் எதுவும் எனக்கு பெற உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**